DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No. 200/2022**
**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | **கோபிநாத்** | Caste | : |
| Father Name | : | **பரமசிவம்** | Calling | : |
| Village | : | | Religion | : |
| Taluk | : | | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **04.06.2026.**

**PW - 11**

**(1** முதல் **7, 9** முதல் **13, 15, 16** எதிரிகள் ஆஜர்**. 8, 14** எதிரிகள் ஆஜர் இல்லை**,** மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது**.)**

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் திருச்சி மாவட்டம், நவல்பட்டு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.08.2020 ஸ்ரீரங்கம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, திருச்சி அரசு மருத்துவமனையில் இருந்து வந்த தகவலை பெற்று அரசு மருத்துவமனை சென்று சிகிச்சையில் இருந்த விஜயராஜ் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று படித்துக் காண்பித்து அவரிடம் கையொப்பம் பெற்றேன். அந்த புகார் **அ.த.சா.ஆ.12** ஆகும். பின்பு நிலையம் வந்து அன்று அதிகாலை 2.30 மணியளவில் ஸ்ரீரங்கம் காவல் நிலைய குற்ற எண்.552/2020 இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 324, 307 மற்றும் பிரிவு 3 பொதுச்சொத்துக்கள் சேதார தடை சட்டம் 1992—ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை

**அ.த.சா.ஆ.13** ஆகும். அசல் புகாரையும், முதல் தகவல் அறிக்கையையும் காவலர் மூலம் குற்றவியல் நடுவர் ஸ்ரீரங்கம் அவர்களுக்கு அனுப்பினேன். அதன் நகல்களை உரிய மேல் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். பின்னர், வழக்கு கோப்பை ஆய்வாளர் செந்தில்வேல்குமார் பார்வைக்கு வைத்தேன். புலன் விசாரணைக்காக ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். ஆய்வாளரின் கையொப்பம் எனக்கு தெரியும். ஆய்வாளர் செந்தில்வேல் குமார் வழக்கு கோப்பை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்று காலை 6 மணியளவில் சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை சாட்சிகள் கண்ணன், பார்த்திபன் முன்னிலையில் பார்வையிட்டு, ஒரு பார்வை மகசர் தயார் செய்தார். சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றார். அந்த பார்வை மகசர் **அ.த.சா.ஆ.14** ஆகும். சம்பவ இடத்தை பொருத்து ஒரு மாதிரி வரைபடம் வரைந்தார். அது **அ.த.சா.ஆ.15** ஆகும். அன்று காலை 6.30 மணியளவில் சம்பவ இடத்திலிருந்து அதே சாட்சிகள் முன்னிலையில் 1) TN48AB 5416 என்ற பதிவெண் கொண்ட கருப்பு நிற Splendor Pro சேதமடைந்த இருசக்கர வாகனம் ஒன்று, 2) இருசக்கர வாகனத்தின் உடைந்த பாகம் சிறிதளவு, 3) பெரிய ஜல்லி கற்கள் –4 ஆகியவற்றை மகசரில் கைப்பற்றி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றார். அந்த மசகர் **அ.த.சா.ஆ.16** ஆகும். அந்த வண்டி தொடர்பான புகைப்படம் **அ.த.சா.ஆ.17** ஆகும். மேற்படி வாகனத்தின் உடைந்த பாகம் சிறிதளவு **அ.த.சா.பொ.1** ஆகும். பெரிய ஜல்லி கற்கள்–4 **அ.த.சா.பொ.2** வரிசை ஆகும். சாட்சிகள் விஜயராஜ், மகேஷ் குமார், செல்வராஜ், முருகானந்தம், பரமசிவம், உத்தமன், செந்தில்குமார், கண்ணன், பார்த்திபன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தார். அன்று காலை 11.30 மணியளவில் ஆய்வாளர் செந்தில்வேல் குமார் திருவானைக்கோவில் ரணியம்மன் கோவில் அருகில் உள்ள முட்காட்டில் எதிரிகள் குண்டன் ரஞ்சித் (எ) ரஞ்சித், பிரபு (எ) பிரபாகரன் மற்றும் அஜய் (எ) ஆகாஷ் ஆகியோர்களை சாட்சிகள் சரவணன், சந்திரசேகரன் முன்னிலையில்

கைது செய்து விசாரித்தபோது, 1ம் எதிரி தாமாக முன்வந்து சாட்சிகள் முன்னிலையில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்து சென்றால், முட்புதரில் மறைத்து வைத்திருக்கும் சவுக்கு கட்டான்களை எடுத்து ஆஜர் செய்வதாக சொன்னார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து எதிரி மற்றும் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.18 ஆகும். பின்பு, 12.50 மணியளவில் ரணியம்மன் அருகில் உள்ள கோவில் முட்காட்டில் அதே சாட்சிகள் முன்னிலையில் 1ம் எதிரி சுமார் 2 அடி நீளமுள்ள சவுக்கு கட்டான்கள்–4 மற்றும் 2 1/2 நீளமுள்ள சவுக்கு கட்டான்கள் – 2, ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்தார். அதை ஆய்வாளர் மகசரில் கைப்பற்றினார். சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றார். அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.த.சா.ஆ.19**. 2 அடி நீளமுள்ள சவுக்கு கட்டான்கள் 4 எண்ணிக்கை **அ.த.சா.பொ.3** வரிசை ஆகும். 2 1/2 நீளமுள்ள சவுக்கு கட்டான்கள் – 2 எண்ணிக்கை **அ.த.சா.பொ.4** வரிசை ஆகும். பின்பு, எதிரிகளை நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். தடய பொருட்களை படிவம் 91ன் படி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். அந்த படிவம் 91 – 2 எண்ணிக்கை **அ.த.சா.ஆ.20** வரிசை ஆகும். சாட்சிகள் சரவணன், சந்திரசேகர் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். ஆய்வாளர் செந்தில்வேல் குமார் பணிமாறுதலில் சென்று விட்டதால் அவருக்கு பின் வந்த ஆய்வாளர் அரங்கநாதன் மேற்படி வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்து, மேற்படி சாட்சிகளை திரும்பவும் விசாரித்தபோது அதே வாக்குமூலங்களை சொன்னதால் புதிதாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. சாட்சிகள் விஜயராஜ், மகேஷ்குமார், செல்வராஜ், முருகானந்தம், பரமசிவம், உத்தமன், செந்தில்குமார் ஆகியோர்களை மீண்டும் விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்தார். 28.04.2022ம் தேதி வழக்கின் சாட்சியான பூமிநாதனை

விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். வழக்கில் காயம்பட்ட சாட்சி விஜயராஜ் மற்றும் மகேஷ் குமார் ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் கோகுல் ஆனந்த், ஜெயப்பிரியா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றிதழ் பெற்றார். வழக்கில் சாட்சிகளின் வாக்குமூலங்களை பதிவு செய்த காவலர் நர்மதாவை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். என்னையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். இத்துடன் வழக்கு விசாரணை முடித்து ஆய்வாளர் அரங்கநாதன் 16.05.2022 அன்று எதிரிகளுக்கு எதிராக இதச பிரிவுகள் 147, 148, 324, 307 மற்றும் 294(பி) மற்றும் பிரிவு – 3 பொதுச்சொத்துக்கள் சேதார தடுப்புச் சட்டத்தின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார். ஆய்வாளர் விசாரணையின்போது சாட்சிகள் விஜயராஜ், மகேஷ்குமார், முருகானந்தம், பரமசிவம், உத்தமன், செந்தில்குமார், கண்ணன், சரவணன் ஆகியோர்கள் வாக்குமூலத்தில் உள்ளவாறு சம்பவம் தொடர்பாக விசாரணையில் சொல்லியுள்ளனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அ.சா.1 ஐ எதிரிகள் யாரும் தாக்கவில்லை என்றும், அ.சா.1, 2 க்கு எதிரிகளால் காயம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 என்னிடம் எந்த புகார் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொன்ன நாளில், விதத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கின் ஆவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. எதிரிகளை ஆய்வாளர் சொன்ன நேரத்தில், இடத்தில் கைது செய்யப்படவில்லை என்றும், 1ம் எதிரி எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அதன் அடிப்படையில் எந்த தடயமும் கைப்பற்றப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. சாட்சிகளை சரியாக விசாரிக்கவில்லை என்றும், சரிவர புலன் விசாரணை

செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் மீது தவறான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.